பக்கங்கள் 14+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 12 புதன்கிழமை 29.10.2025 | அதிர்வு 90

## புத்தளத்தில் 2 மீனவர்கள் பரிதாபச் சாவு!

(க.மகாதேவன்)



புத்தளம், நாரக் கல்லி பகுதியில் கட லில் மிதந்து வந்த போத்தல் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## செவ்வந்திக்கு உதவிய பெண் சட்டத்தரணி கடவத்தையில் கைது!



பாதாளக் குழு உறுப்பினர் கணே முல்ல சஞ்சீவ படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட் 02

## ரணிலுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணை ஜனவரிக்கு ஒத்திவைப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு கோட்டை நீதிவான் நெத்தி குமார இன்று புதன்கிழமை பிற்பகல் உத்தர விட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப் பகுதி 02

## அநுர கட்சி எம்.பிக்கு பிடியாணை உத்தரவு



நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறிய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் மனு வர்ணவைக் கைது செய்யப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டை நீதிவான் இசுரு நெத்திகுமார இன்று 02

# மாகாணத் தேர்தலிலும் என்.பி.பி. வெற்றிநடை

### பிரதி அமைச்சர் சுனில் நம்பிக்கை



வரும் மாகாண சபைத் தேர்தலில் 9 மாகாண சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றிநடை போடும் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

தென்னிலங்கை தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்

## நுவரெலியாவில் இளைஞரின் சடலம் மீட்பு!



(க.கிஷாந்தன்)

நுவரெலியாவில் டொப்பாஸ் வனப் பகுதியில் இன்று காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா, சாந்திபுர பகுதியைச் சேர்ந்த 27 வயதான ரோஷன் லக்மால் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் இந்த மாதம் 8 ஆம் 02

## தமிழ்நாட்டில் 3 இலங்கைத் தமிழர் கைதாகி நாடு கடத்தப்படுகின்றனர்

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக தமிழ்நாடு சென்றிருந்த 3 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

15 நாள்களுக்கு முன்னர் சட்டவிரோதமாக படகில் இந்த 3 பேரும் தமிழ் நாட்டுக்குள் நுழைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்னை – மண்ணடியில் தங்கி இருந்த இசைவேந்தன், யோகராசா, சுஜீவன் என்ற இந்த மூவரையும் நேற்



றுத் தனிப்படை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் மூன்று பேரிடமும் 02

# கைவிலங்குடன் சந்தேகநபர் தப்பியோட்டம்!

கம்பஹாவில் அத்தனகல்ல நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிறைக் கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர், திடீரென சுகயீன முற்று வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டதையடுத்து, கைவிலங்குடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று நிட்டம்புவை பொலிஸார் தெரிவித்தனர்.

குருவலான பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் போதைப்பொருள் குற்றம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு வழக்கு விசாரணைக்காக அத்த னகல்ல நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது திடீரென சுகயீனமுற்றுள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள் ளார்.தப்பிச் சென்ற சந்தேகநபரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.இது தொடர்பான மேலதிக விசாரணை களை நிட்டம்புவை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் இருந்த திரவத்தைப் பருகினார் கள் எனக் கூறப்படும் இருவர் உயிரிழந் துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவத்தால் பாதிக் கப்பட்ட இருவர் புத்தளம் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

28 வயதான இருவரே உயிரிழந் துள்ளனர்.

நுரைச்சோலை பகுதியில் கடற்றொ ழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நான்கு கடற்றொழிலாளர்கள், கடலில் மிதந்து வந்த மர்மமான திரவம் நிரப்பப்பட்ட போத்தல் ஒன்றைக் கண்டெடுத்து அதனை அருந்தியுள்ளனர்.

திரவத்தைப் பருகியதைத் தொடர்ந்து, ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் துள்ளார். ஏனையவர்கள் கடும் சுகவீன மடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மூவரும் புத்தளம் வைத்தி யசாலைக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றைய இருவரும் தற்போதும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

இந்நிலையில், அவர்கள் குடித்த திரவம் மற்றும் அது எங்கிருந்து வந்தது என்பது குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலி ஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## செவ்வந்திக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள இஷாரா செவ்வந்திக்கு உதவினார் எனக் கூறப்படும் பெண் சட்டத்தரணி ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவவைப் படுகொலை செய்வதற்காக வந்த இஷாரா செவ்வந் திக்கு, கைத்துப்பாக்கியை மறைத்து எடுத்து வருவதற்காக 'தண்டனைச் சட்டக் கோவை' நூலின் பிரதியொன்றை இந்தச் சட்டத்தரணியே வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பெண் சட்டத்தரணி நேற்று இரவு கடவத்தைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்கக் குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு இன்று அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி, வழக்கு விசாரணையொன்றுக்காக சிறைச்சாலை அதிகாரிகளால் புதுக்கடை நீதிமன்றத் துக்கு அழைத்து வரப்பட்ட கணேமுல்ல சஞ்சீவ, அந்த நீதிமன்ற வளாகத்துக்குள் ளேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவத்தின் துப்பாக்கிதாரி அன்றைய தினமே பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும், துப்பாக்கியை நீதிமன்ற வளாகத்துக்குள் கொண்டு வந்த இஷாரா செவ்வந்தி என்பவரைக் கைது செய் வதற்குப் பாதுகாப்புப் பிரிவினர் கடும் பிரயத்தனம் மேற்கொண்டனர்.

இதன்படி, கடந்த 14ஆம் திகதி நேபா ளத்தில் தங்கியிருந்தபோது இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் இஷாரா செவ்வந்தி தப்பிச் செல்வதற்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த பலரும் தற்போது கைது செய்யப்பட் டுள்ளனர்.

## தமிழ்நாட்டில்...

இந்தி யாவில் வந்து தங்குவதற்கான எந்த ஆவணமும் இல்லை என்பது தெரிய வந்தது.

மேலும், அவர்கள் மூன்று பேர் மீதும் இலங்கையில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

## நுவரெலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி முதல் வீட்டில் இருந்து காணா மல் போயிருந்தார் எனவும், இது குறித்து அவரது குடும்பத்தினர் நுவரெலியா பொலிஸில் புகார் ஒன்றை முன்வைத் திருந்தனர்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை டொப்பாஸ் வனப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற தொழி லாளர்கள் குழுவொன்று வனப்பகுதியில் ஒரு சடலம் இருப்பதைக் கண்டறிந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை யடுத்து, நுவரெலியா பொலிஸ் அதிகாரி கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசார ணைகளை ஆரம்பித்தனர்.

பின்னர், சம்பவ இடத்தில் கண்டெடுக் கப்பட்ட சடலம் அவரது தந்தையால் அடையாளம் காணப்பட்டது எனவும், சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் பொலி ஸார் மேலும் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணைகள் நுவரெலியா பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு முதல் கோட்டை நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் இருக்கும் இரண்டு வழக்குகள் தொடர்பாக இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டபோது, சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை.

அவர் சார்பாக நீதிமன்றத்தில் முன்னி லையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் தேசிய நில விநியோகத் திட்டத்தில் பங் கேற்றதால் இன்று நீதிமன்றத்தில் முன் னிலையாக முடியவில்லை என்று நீதி வானிடம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, முன்வைக்கப்பட்ட வாதங் களைக் கருத்தில் கொண்டு, சந்தேகநப ருக்கு கோட்டை நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத்தில் சலுகைகள் கிடைக்காததால் எதிரணி எம்.பிக்கள் சிலர், பதவி துறந்துவிட்டு முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு முற்படு கின்றனர். இது அவர்களுக்குள்ள உரிமை. அதனை நாம் சவாலுக்குட்ப டுத்தவில்லை.

எதிரணிகள் ஒன்று சேர்ந்து போட்டியிட் டால் கூட எமக்குச் சவால் இல்லை. 9 சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும்." – என்றார்.

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில், அவரது மனைவி பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக இலண்டன் செல்வதற்கு அரச நிதியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன் னிலையாகியிருந்த போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு இன்று மீண்டும் அழைக்கப்பட்ட நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை களை விரைவுபடுத்தி சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான், குற்றப் புலனாய்வுத் திணைக கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

# மட்டிக்களி நீரேரி பூங்கா மதுப்பிரியர்களின் இலவச திறந்த வெளி மதுபானசாலையா?

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை நகர்புற மக்களின் ஆரோக்கியம், மன நிம்மதி, பொழுது போக்கு என்பவற்றுக்காக மட்டுமல்லாமல், நகரின் அழகுக்காகவும் மட்டிக்களி பகுதியில் லகூன் பூங்காவானது அப்போதைய நகரசபையால் அமைக்கப்பட்டது. இதனை நல்ல முறையில் பயன்படுத்தி பாதுகாக்க வேண்டியது அனைவரது பொறுப்புமாகும்.

இந்தப் பகுதியில் அதிகாலையிலும், மாலையிலும் பலர் உடற்பயிற்சி, நடைப் பயிற்சி மேற்கொள்வதையும், மன நிம்மதிக்காகக் கடலையும், வானத்தையும் அங்குள்ள இருக்கைகளில் அமர்ந்து இரசித்துக் கொண்டிருப்பதையும் காண முடியும்.

இந்தப் பகுதியை அண்மித்து நடத்தப்படும் தனியார் மேலதிக வகுப்புகளில்



கற்க வரும் மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் வகுப்பு முடியும்வரை அவர்களை அழைத்துச் செல்ல இந்தப் பகுதியில் தரித்து நிற்கின்றனர். அப்போது அவர்கள் தமக்கிடையில் ஆரோக்கிய மான உரையாடல்களிலும் ஈடுபடுகின்ற னர். இவ்வாறான இடத்தில் இத்தகைய நன்மையான விடயங்களைக் கேள்விக்கு உட்படுத்தும் வகையிலும் பொது மக்களை முகம் சுழிக்க செய்யும் வகையிலும் துர்நடத்தைகள் பல நடைபெற்று வருவதை அண்மைக் காலமாக காண முடிகின்றது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை தொடருமானால் குறித்த பூங்கா எதற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் பாதிப்படையும். இதனால் அதன் மூலம் நன்மை அடைகின்ற வர்களும் பாதிக்கப்படுவார்கள். அதுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில் எல்லா தரப்பினராலும் இப்பூங்காவை பயன் படுத்த முடியாமலும் போகலாம்.

எனவே இந்த பூங்காவை ஆரோக்கியத்துடன் பேணவேண்டுமாயின் பொது மக்கள் அனைவரும்,குறிப்பாக மது அருந்த இந்த இடத்தை பயன்படுத்துவோர் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வது அவசியம் என்று பல தரப்பிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக மணல் அகழ்வு மறவன்புலோவில் தொடர்கிறது!

### தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள் என்கிறார் பிரதேசசபை உறுப்பினர் விமலதாஸ்

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேச சபைக்குட்பட்ட மறவன்புலோ கிழக்கு மற்றும் மறவன்புலோ மேற்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபை உறுப்பினர் தி.விமலதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இந்த விடயத்தைச் சபையில் சுட்டிக்காட்டியிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மறவன்புலோவில் தினமும் டிப்பர்கள் மூலம் சட்டவிரோதமாக மணல்



அகழப்படுகின்றது. மணல் கொள்ளை இடம்பெறுகின்ற பகுதிகளில் இரகசியக் கமெராக்களைப் பொருத்தி குற்றவாளிகளை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

எமது பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட கச்சாய் பகுதியில் மணற் கொள்ளையர்களின் உழவு இயந்திரம் மோதி அண்மையில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்திருந்தார்.

இவ்வாறான அசம்பாவிதங்களை தடுக்க மணற் கடத்தலை முற்றாக நிறுத்த வேண்டும்.

மறவன்புலோ கிராமத்தில் கடற் கரையோரம் மணல் அகழப்படுவதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகின்றது.- என்றார்.

# திருகோணமலை கரையோர மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கவனம் எடுக்க வேண்டும்

### தமிழர் சமூக ஜனநாயகக்கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சின்னமோகன் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

பருவகால அடைமழை ஆரம்பித்து இருப்பதால் திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பாக வெருகல், ஈச்சிலம்பற்று, மூதூர், சம்பூர், கல்லடி, உப்புறல், குச்சவெளி, புல்மோட்டை, திருகோணமலை 10 ஆம் குறிச்சி, சல்லி ஆகிய கரையோர மீனவர்கள் தமது தொழில்களை மேற்கொள்ள முடியாமல் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் பல கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களது பிரச்சினைகள் தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.



தமிழர் சமூக ஜனநாயகக்கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சின்ன மோகன் தனது ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (28) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தை அண்டிய மீனவக் குடும்பங்களுக்கு அரசால் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களும் தங்களால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தில் உடன் கவனம் எடுக்க வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.






# "ஒரு குடம் கண்ணீர்" நூல் வாசிப்பனுவ நிகழ்வு

இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகத்தின் ஏற்பாட்டில் பன்னூல் ஆசிரியரும் சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய. "ஒரு குடம் கண்ணீர்" நூல் வாசிப்பனுவ நிகழ்வு கொழும்பு – 12, பாத்திமா மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு டாக்டர் முனீர் அபூபக்கர் தலைமை தாங்கினார். இளைஞர் பயிற்றுவிப்பாளர் ஹுஸ்னி ஜாபிர், இலங்கை திறந்த பல்கலைக் கழக விரிவுரையாளரும் ஊடகவியலாளருமான திருமதி தேவ கௌரி மகாலிங்கசிவம் ஆகியோர் நூல் வாசிப்பனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அக்பர் பிரதர்ஸ் சந்தைப் படுத்தல் முகாமையாளர் இன்ஷாப்டீன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கொலன்னாவைப் பிரதேச பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் பெரோஸ் முகம்மத் உரை நிகழ்த்தினார். அவருக்கு நூலாசிரியர் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவம் வழங்கப்பட்டது. இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகத் தலைவர் இம்ரான் நெய்னார் மற்றும் 4எஸ் அமைப்பினர் நூலாசிரியருக்குப் பொன்னபடைபோர்த்திக் கௌரவம் வழங்கினார்.

வரவேற்புரையை ஆஷிகா பர்ஷான் வழங்கியதோடு நிகழ்வுகளை ஷிமாரா அலி தொகுத்து வழங்கினார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் மலேரியாவா?

மாரி மழைப் பருவ காலம் தொடங்கி விட்டது. ஏற்கனவே நாட்டை சுகாதார நெருக்கடியில் ஆழ்த்தியிருக்கும் டெங்கு நோய்த் தொற்றுப் பிரச்சினை இனி பழையபடி பூதாகரவடிவெடுக்கும் ஆபத்து உண்டு. அத்தகைய சூழ்நிலையில் அதுபோன்ற இன்னொரு பிரச்சினையும் மோசமான கட்டத்தை எட்டும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக சுகாதார அதிகாரிகள் அபாய எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குத் திரும்பும் பயணிகள் ஊடாக நாட்டில் மலேரியாத் தொற்று பரவுவதற்கான வாய்ப்புகள் எச்சரிக்கை கட்டத்தை அடைந்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

இலங்கைக்குத் திரும்பும் பயணிகளிடையே 'இறக்குமதி' செய்யப்பட்ட மலேரியா தொற்றுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், இலங்கையில் மலேரியா மீண்டும் பரவக்கூடும் என்ற கவலையை சுகாதார அதிகாரிகள் எழுப்பியுள்ளனர்.

இந்த ஆண்டு இப்படி 27 பேருக்கு மலேரியாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் இருக்கும்போது இந்தத் தொற்றுக்குள்ளான- பாதிக்கப்பட்ட- இலங்கையர்கள். அவர்கள் நாடு திரும்பும் போது தம்முடன் மலேரியாத் தொற்றையும் காவி வந்திருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

உரிய முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கைகள் நேர காலத்துடன் கண்டிப்பாகப் பின்பற்றப்படாவிட்டால், 'இறக்குமதி செய்யப்பட்ட' மலேரியாத் தொற்றுகளின் அதிகரிப்பு உள்ளூர் பரவலுக்கு வழிவகுக்கும் என்று அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

"மலேரியாவுடன் திரும்பும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாங்கள் காண்கிறோம், இது நாட்டிற்கு மீண்டும் நோயை அறிமுகப்படுத்தும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது" என்று மலேரியா தடுப்புப் பிரசாரப் பிரிவு கூறுகின்றது.

நிலைமையைக் கருத்தில் கொண்டு, நாடு திரும்பும் அனைவரும் வருகையின் போது மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

இலங்கை மலேரியாவை முற்றாக ஒழிப்பதில் பத்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே வெற்றி கண்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பால் இலங்கை மலேரியா இல்லாத நாடாக சான்றளிக்கப்பட்டது, கடைசியாக 2012 இல் உள்நாட்டு மலேரியாத் தொற்று இருந்தமை பதிவாகியிருந்தது.

வெளிநாட்டில் இருந்து வரும் மலேரியாத் தொற்று, நுளம்புகளின் பெருக்கத்தினாலும் தொற்றுக் காவுகையினாலும் இலங்கையிலும் மீண்டும் நிலைகொண்டு பரவுவதற்கான ஆபத்து ஏற்படக் கூடும்.

இதற்கிடையில், நாட்டில் தற்போது நான்கு டெங்கு வைரஸ் வகைகள் தாராளமாகப் பரவி வருகின்றன எனவும், பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளில் சுமார் 40 வீதம் முதல் 50 வீதம் வரை நேர் மறையான முடிவுகளைத் தருகின்றன எனவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவன முடிவுகளை மேற்கோள்காட்டி சமூக மருத்துவ ஆலோசகர் டாக்டர் பிரஷீலா சமரவீர கூறுகின்றார்.

இரண்டு முக்கிய டெங்கு வகைகள் தற்போது ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அவற்றைக் காவிப் பரப்பும் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்கின்ற இடங்களை அகற்றுவதில் சமூக ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகின்றது எனவும் சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

"டெங்கு மற்றும் மலேரியாத் தொற்றுகளைக் கட்டுப்படுத்துவது வெறும் அரசாங்கப் பொறுப்பு மட்டுமல்ல. நுளம்புகளால் பரவும் நோய்களைத் தடுக்க அனைவரும் சேர்ந்தே நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று சமூக மருத்துவ ஆலோசகர் டாக்டர் பிரஷீலா சமரவீர மேலும் கூறுகின்றார். அது முற்றிலும் உண்மை.

முழு நாடும் - முழு மக்களும் - பொறுப்புணர்வுடன் ஒன்றிணைந்தால் மட்டுமே இந்த சுகாதார - மருத்துவ அச்சுறுத்தலில் இருந்து விடுபட முடியும்.



# அரியாலை உதயதாரகை சிறுவர் தின நிகழ்வுகள்

(த.சுபேசன்)

அரியாலை நாவலடி உதயதாரகை சிறுவர் கழகத்தின் சிறுவர் தினக் கொண்டாட்டம் அண்மையில் உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் சிறுவர் கழக உப தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சிறுவர் பங்குபற்றலூடாக சிறுவர் கழகங்களை வலுப்படுத்தும் நோக்குடன் நிகழ்வுகள் நடைபெற்றது.

நாவலடி, பூம்புகார், மணியந்தோட்டம், வேளாங்கண்ணிதோட்டம், உதயபுரம் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுடன் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான நிறுவனம், நல்லூர் பிரதேச செயலகம், சி.சி.எச். நிறுவனம்,





யாழ்ப்பாண சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவு ஆகியன இணைந்து சிறுவர் தினத்தை நடத்தின. சிறுவர்களுக்கு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.





# தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடுகள் திருத்த இரண்டாம் கட்ட நிதி!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடுகளை புனரமைப்பதற்கு 2 லட்சம் பெறுமதியான காசோலைகள் நேற்று முன்தினம் (27) திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இதன் இரண்டாம் கட்டமாக அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, தமது வீடுகளை பூரணப்படுத்துவதற்காக இந்நிதி இலங்கை அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச அபிவிருத்தி குழுத் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவால் வழங்கி வைக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கல்முனை பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கல்முனை பிராந்திய உத்தியோகத்தர் சபீஸ் கான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் எஸ். இம்தியாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.









# கால்நடை மருத்துவர், நீர்பாசனப் பொறியியலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

வடக்கு மாகாண கால்நடை மருத்துவர்கள் மற்றும் நீர்பாசனப் பொறியியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்றது.

கால்நடை மருத்துவர்களுடனான சந்திப்பில் முதலில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் விவசாயம், மீன்பிடி ஆகியன வற்றுக்கு அடுத்த நிலையில் கால்நடை வளர்ப்பு உள்ளது. கால்நடைகளை நம்பித்தான் பல குடும்பங்களின் வாழ்வாதாரமும் உள்ளது. அந்தக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். செய்தவற்றையே திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருக்காமல் புத்தாக்கமாக சிந்தித்து அடுத்த ஆண்டு செயற்படவேண்டும். வன்னி போன்ற பிரதேசங்களில் மக்கள் தங்கள் கால்நடைகளுடன் அலைந்து திரிந்து சிகிச்சையளிப்பதில் சிரமங்கள் உள்ளன. கால்நடை மருத்துவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும் என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் கால்நடை மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடப்பட்டது. ஆளணிப் பற்றாக்குறை மற்றும் வாகனப் பிரச்சினை என்பன முன்வைக்கப்பட்டது. அத்துடன் கால்நடைகளுக்கான மருந்து வழங்கலுக்கு மாகாண ரீதியிலான பொறிமுறையை உருவாக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வன்னிப் பிரதேச கால்நடை மருத்துவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாகன வசதிகள் செய்து வழங்குவதற்கும் ஆளணிகளை வருடாந்த இடமாற்றத்தில் நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் குறிப்பிட்டார். அதே போன்று கால்நடைகளுக்கான மருந்து வழங்கலுக்கு, கால்நடை மருத்துவர்களையும் பொறிமுறையை முன்மொழியுமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து மாகாண நீர்பாசனப் பொறியியலாளர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலான இந்த ஆண்டுக்கு உரிய வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் சிறப்பாக உள்ளமைக்காக பொறியியலாளர்களுக்கு பாராட்டுகின்றேன். இதேபோன்று அடுத்த ஆண்டும் மக்கள் மேலதிகமாக பயிர் செய்கை செய்யக் கூடிய வகையில் குளங்களின் புனரமைப்புக்கள் அமைய வேண்டும்.

மேலும், நீர்பாசனத்திணைக்களத்துக்குச் சொந்தமான வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும். அதனை நீர்பாசனத் திணைக்களம் புனரமைப்பதில் முரண்பாடுகள் காணப்படுமாயின் வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது உள்ளூராட்சி மன்றத்திடம் அவற்றைக் கையளிக்கலாம். இதேநேரம், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சிலர் இன்னமும் ஒப்பந்த வேலைகளை முன்னெடுப்பதாக மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. அவ்வாறு செயற்பட இடமளிக்க முடியாது என்று ஆளுநர் தெரிவித்தார்.

இதேநேரம், நீர்பாசனப் பொறியியலாளர்கள் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துக் கூறினர். இது தொடர்பில் விரைவான தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடல்களில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். சத்தியசீலன், விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் ச.சிவஸ்ரீ, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் நீர்பாசனத் திணைக்களம் என்பனவற்றின் மாகாணப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.









# சாய்ந்தமருதில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு; தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் உரை!

(நூருல் ஹுதா உமர்)

தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் திருமதி எம்.சி. நஸ்லின் றிப்கா அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் எம்.எம். ரிபாவுதீன் விசேட அதிதியாக கலந்து கொண்டு தேசிய வாசிப்பு மாதம் தொடர்பான சிறப்புரை நிகழ்த்தினார்.

இதன்போது வாசிப்பின் முக்கியத்துவம் பற்றிய மாணவர் முன்வைப்புகள் இடம்பெற்றது. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சஞ்சிகை மற்றும் வாசிப்பு போட்டிகளுக்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கலாசார நிகழ்வில் பங்கு பற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சாய்ந்தமருது பிரதேச கலாசார போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பெற்று பின்னர் மாவட்ட கலாசார போட்டியில் முதலிடம் பெற்று அதன் பின்னர் அகில இலங்கை கலாசார போட்டியான புதுக்கவிதை எழுதுதல் போட்டியில் பங்கு பற்றி அகில இலங்கை ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்ற அன்ஹா ஹம்தூன் எனும் மாணவிக்கான கௌரவிப்பு இதன்போது நடைபெற்றது. இவருக்கான கௌரவிப்பு எதிர்வரும் நவம்பர் 07 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியைகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.














# இன்றைய எழுத்துகள் நாளைய சமுதாயத்துக்கு வழிகாட்டியாக இருத்தல் வேண்டியது அவசியம்!

## மெல்பேர்னில் பாடும்மீன் ஸ்ரீகந்தராசா உரை

இன்றைய சமுதாயத்துக்கு விடுக்கப்படுகின்ற செய்திகள் தான், நாளைய நம் எதிர்காலச் சந்ததிகளுக்கு நல் வழியை நாம் வகுத்துக் கொடுக்க வேண்டும். அந்த வகையில், ஐங்கரனின், நூல்களிலும் மக்களுக்கான செய்திகள் இருக்கும், இருக்கின்றன, நிறையவே இருக்கின்றன என்று பாடும்மீன் சு. கந்தராசா தெரிவித்தார்.

மெல்பேர்னில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீட்டு நிகழ்ச்சியில் தலைமை வகித்து உரையாற்றிய பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா மேலும் பேசுகையில்,

எத்தனையோ பேர் எழுதுகிறார்கள், துருப்பிடித்த குழாய்த் தண்ணீர் வரண்ட நிலத்திலே இறங்குவதைப் போல, சிலரது எழுத்துக்கள் இருக்கும், நோக்கம் இருக்கும், ஆனால் தாக்கம் இருக்காது. பள்ளத்தை நோக்கிப் பாய்கின்ற வெள்ளத்தைப் போல சிலரது எழுத்துக்கள் இருக்கும். வேகம் இருக்கும், விடயம் இருக்காது.

எழுத்துக்கள், தெளிந்த நீரோடையில் நெளிந்து ஓடுகின்ற குளிர்ந்த நீரை போல இருக்க வேண்டும். இடையிலே தடைகள் இல்லாமல் எளிதாக நகர்ந்து செல்கின்ற சொற்களால் அழகாக வாக்கியங்கள் அமைய வேண்டும். எழுத்து நடை இயல்பாக இருக்க வேண்டும்.

நாளைய சமுதாயத்துக்கும் கொடுத்துத் தொடர்கின்ற நல்லதொரு பதிவாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. இல்லயென்றால் அந்த எழுத்தால் பயனில்லை. அந்த எழுத்தில் நயமில்லை. அந்த எழுத்துக்கு உயிரில்லை. வாசிக்கின்றவர்களை யோசிக்க வைக்கும் இரண்டு வரிகளாவது இருந்தால் தான் அந்த எழுத்தாளன் சமுதாயத்தை நேசிக்கின்றான் என்று அர்த்தம்.– என்றார்.

மெல்பேர்ன் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்டன.

“தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்”, “இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்”, “ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்”, “முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்””தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்”, “இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்” ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்களின் வெளியீடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.







# ஆழிவனம் இயற்கை சுற்றுலாத்தலத்தின் மேம்பாடு தொடர்பில் ரவிகரன் எம்.பி. ஆராய்வு

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள ஆழிவனம் இயற்கை சுற்றுலாத் தலத்துக்கு நேரடியாகச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த இயற்கை சுற்றுலாத்தலத்தின் மேம்பாடு தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது குறித்த களவிஜயத்தின் போது கரைதுறைப்பற்று பிரதேசசபையின் செயலாளர் திருமதி. இராஜயோகினி ஜெயக்குமாரும் பங்கேற்றிருந்தார்.








# தேசிய ரீதியில் சாதித்த வீரர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கத் தீர்மானம்!

## வர்ண இரவு விருது வழங்கலை மீள ஆரம்பிக்கவும் நடவடிக்கை

வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்து வப்படுத்தி தேசிய ரீதியில் சாதித்த வீரர்களுக்கு பணப் பரிசு வழங்குவதற்கும், கடந்த காலங்களில் நடைபெற்ற வர்ண இரவு விருது வழங்கலை மீள ஆரம்பிப் பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவை செயற்படுத்தப்படவுள்ளன என்று வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் மாவட்ட, பிரதேச விளையாட்டு உத்தியோ கத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (28) நடை பெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆளுநர், தேசிய மட்டத்தில் சாதித்த வீரர்களை ஊக்குவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் ஏனையோரையும் சாதிக்கத் தூண்ட முடியும். அதேபோல தேசிய மட்டத்தில் சாதிக்கும் மாணவர்களின் பாடசாலைக ளுக்கு தேவையான விளையாட்டு உப கரணங்களையும் வழங்கவேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடான கழகங்களுக்கான விளையாட்டு உப கரணங்கள் வழங்கல் என்பது பெருமள வில் இடம்பெறவில்லை. இந்த விடயத்தில் மாகாண விளையாட்டுத் திணைக்களம் கூடுதல் கவனம் செலுத்தி, பிரதேச மட்ட கழகங்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்ப தற்கு அந்தந்த மாவட்டச் செயலர்களுடன் இணைந்து செயற்படவேண்டும்.

விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டி மாவட்ட மட்ட விளையாட்டுப்போட்டி, தேசிய மட்ட விளையாட்டுப்போட்டி என்ப னவற்றுடன் தமது பணி முடிந்ததாகக் கருதுகின்றனர். குறிப்பாக பிரதேச விளையாட்டுக் கழகங்களை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிக்காக அழைத் துக் கலந்துரையாடுவதுடன் விட்டுவிடு கின்றனர். அந்தக் கழகங்களை தொடர்ந் தும் உயிர்ப்புடன் வைத்திருக்கும் வகை யில் செயலாற்றுவதில்லை. விளையாட்டு உத்தியோகத்தர்கள் களத்தில் எப்படி பணியாற்றுகின்றார்கள் என்பதைக் கண் காணிப்பதற்கான பொறிமுறையை உரு வாக்குவதுடன் அவர்களின் வினைத்திற னின் அடிப்படையிலேயே பதவி உயர்வு கள் அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

தேசிய மட்டப் போட்டிகளுக்குச் செல் லும் விளையாட்டு வீரர்களுக்கான போக்கு வரத்து வசதி தொடர்பிலும் கலந்துரையா டப்பட்டது. மாகாண அமைச்சுக்களிலுள்ள பஸ்களை அவற்றுக்குப் பயன்படுத்துமாறு ஆளுநரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஒவ்வொரு கோட்டத்திலும் ஒவ்வொரு பாடசாலையைத் தெரிவு செய்து அங்கு தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்குவதற் கான பொறிமுறை உருவாக்கம் தொடர் பிலும் ஆராயப்பட்டது. ஏற்கனவே வலய ரீதியான ஒவ்வொரு பாடசாலை மைதா னங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை மாகாண நிதியில் புனரமைப்புச் செய்து பராமரிப்பதற்கான ஒழுங்குகள் திட்ட மிடப்பட்டு வருகின்றன என்று கல்வி அமைச்சின் செயலர் இதன்போது குறிப் பிட்டார்.

இதேவேளை, மாகாண மட்ட போட்டி கள் முடிவடைந்த பின்னரே தேசிய மட்டத் துக்கான வீரர்களை அடையாளப்படுத்தி தயார்படுத்தல்கள் நடைபெறுவதால் அவர்களுக்கு உரிய போதுமான பயிற்சி கள் வழங்கப்படாமல் தேசிய ரீதியில் சாதிக்க முடிவதில்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

எதிர்காலத்தில் கோட்ட மட்ட போட்டி முடிவுகளின் அடிப்படையில் தேசியத்துக்கு தகுதி பெறக் கூடியவர்கள் எனக் கருதும் வீரர்களை அடையாளப்படுத்தி அவர்க ளுக்கு தொடர் பயிற்சிகளை வழங்குவ தற்கு தீர்மானிக்கப்பட்டது. அதேநேரம், விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்துக் கொடுப்பனவை அதிகரிப் பதற்கான கோரிக்கையும் கலந்துரையா டலில் முன்வைக்கப்பட்டது.

பாடசாலைகளில் விளையாட்டு வாரத்தை அறிமுகப்படுத்துவதற்கும், பாடசாலைகளின் மைதானத் துப்புரவு வேலைத்திட்டத்தை மாகாண ரீதியில் ஒரே காலப் பகுதியில் முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், பாடசாலை களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளில் போசாக்கற்ற உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றமையைத் தடை செய் யும் சுற்றறிக்கையை மீண்டும் வெளி யிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

இதேநேரம், முதல்தர அணிகளை மாத்திரம் வளர்த்தெடுக்காமல் இரண்டாம் நிலைஅணிகளைவளர்த்தெடுப்பதற்கான யோசனையும் விளையாட்டு உத்தியோகத் தர்களால் முன்வைக்கப்பட்டது. இதன் ஊடாக அதிகளவான விளையாட்டு வீரர்களை உருவாக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. பாடசாலைகளில் சிறப்பாகச் செயற்படும் விளையாட்டு வீரர்களை தொடர் பயிற்சிக்கு அனுமதிப் பதில் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர் கள் தடை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டப் பட்டது. அந்த மாணவர்களின் கல்வியை கருத்தில்கொண்டு அவர்களால் இவ்வாறு தடை ஏற்படுத்தப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டது. விளையாட்டுத்துறையில் ஈடுபடும் மாணவர்களை குழுவாக்கி அவர்களுக்கான பிரத்தியேக வகுப்பு களை நடத்துவதன் ஊடாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும், பாடசாலைகளிலுள்ள விளை யாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும், ஆண்டுக்கான விளை யாட்டு நாள்காட்டியை அனைவரும் இணைந்து தயாரிப்பதன் ஊடாக பல்வேறு சிரமங்களை தவிர்க்க முடியும் என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். அத்துடன் மாகாணத்தின் விளையாட்டு அபிவிருத்திக்கான திட்டத்தை முன்வைக் குமாறும் மாகாணப் பணிப்பாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுந ரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், விளையாட்டுத்துறை மாகா ணப் பணிப்பாளர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலக விளை யாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.









# அகில இலங்கை மக்கள் காங்கிரஸால் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

**(றிபாஸ்)**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரத்தில் ஏ தரச் சித்திகளைப் பெற்று பாடசாலைக்கும் பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளை கௌரவிக்கும் "ASSAD INSPIRE AWARDS-2025" மாபெரும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளர் எம்.எஸ். எம்.ஜஃபர் உட்பட மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று, திருக்கோவில் கல்வி வலயங்களைச் சேர்ந்த சுமார் 158 மாணவ, மாணவிகளுக்கு, நினைவுச் சின்னம், பணப்பரிசு என்பன வழங்கி வைக்கப்பட்டன.தமிழ், முஸ்லிம் மாணவர்களின் கலை, கலாசார நிழ்வுகளும் இடம்பெற்றன.









# காக்கிநாடா – மசூலிப்பட்டினம் இடையே நேற்று கரையை கடந்தது 'மோந்தா' புயல்

மோந்தா' புயல் ஆந்திராவில் நேற்று இரவு காக்கிநாடா – மசூலிப்பட்டினம் இடையே அந்தர்வேதிபாளையம் என்னும் இடத்தில் கரையைக் கடந்துள்ளது.

கரையை புயல் கடந்தபோது மணிக்கு 110 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த சூறாவளி காற்று வீசியுள்ளது. இதனால் காக்கிநாடா, மசூலிப்பட்டினம், கோனசீமா மாவட்டங்களில் பெரும் பாதிப்பை மோந்தா புயல் ஏற்படுத்தி உள்ளது.

புயல் காரணமாக மரங்கள் சாய்ந்தன. 2 பெண்கள் உயிரிழந்துள்ளனர். 50 இற்கும் மேற்பட்ட கால்நடைகளும் உயிரிழந்தன. 107 ரயில்கள், 18 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் பயிர்கள் நாசம் அடைந்துள்ளன. போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.1,204 இற்கும் மேற்பட்ட நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு அங்கு 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, வங்க கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்று நேற்று காலை புயலாக மாறியது. இந்த புயலுக்கு 'மோந்தா' என பெயரிடப்பட்டது.

# காற்று மாசைக் கட்டுப்படுத்த நடவடிக்கை: டில்லியில் செயற்கை மழை பொழிந்தது






டில்லியில் நேற்று மேக விதைப்பு நடைமுறை மூலம் செயற்கை மழை பெய்விக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக டில்லியில் காற்று மாசு கணிசமாக அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க முதல்வர் ரேகா குப்தா தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டுமானப் பணியின்போது உரிய விதிகளைப் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டு உள்ளது. எதிர்வரும் நவம்பர் 1 ஆம் திகதி முதல் பிஎஸ்-6 சரக்கு வாகனங்கள் மட்டுமே டில்லிக்குள் அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

டில்லியில் நேற்றைய கணக்கீட்டின்படி காற்று தரக் குறியீடு 315 புள்ளிகளாக இருந்தது. இந்த காற்றை சுவாசித்தால் பொதுமக்களின் உடல் நலனுக்கு அதிக தீங்கு ஏற்படும் என்று மருத்துவர்கள் எச்சரித்து உள்ளனர். இந்த சூழலில் காற்று மாசை கட்டுப்படுத்த டில்லியில் செயற்கை மழையை பெய்விக்க முதல்வர் ரேகா குப்தா உத்தரவிட்டார்.

இதற்காக கான்பூர் ஐ.ஐ.டியின் உதவி கோரப்பட்டது (ஐ.ஐ.டி என்பது இந்தியாவில் உள்ள ஒரு புகழ்பெற்ற உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்). டில்லி அரசு மற்றும் கான்பூர் ஐ.ஐ.டி. இணைந்து டில்லியில் நேற்று செயற்கை மழையை பெய்விக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

உத்தர பிரதேசம் கான்பூரில் இருந்து செஸ்னா ரக விமானம் டில்லிக்கு புறப்பட்டது. சுமார் 6,000 அடி உயரத்தில் பறந்த இந்த விமானம் டில்லியின் புராரி, விஹார், கரோல் பாக் உள்ளிட்ட இடங்களில் மேகங்கள் மீது இரசாயனங்களை தூவியது. இந்த மேகவிதைப்பு நடைமுறை வெற்றி அடைந்து டில்லியின் பல்வேறு பகுதிகளில் நேற்று செயற்கை மழை பெய்தது.

இதுகுறித்து கான்பூர் ஐஐடி பேராசிரியர்கள் குறிப்பிடுகையில்,

"செஸ்னா விமானம் மூலம் டில்லியின் பல்வேறு பகுதிகளில் திரண்டிருந்த மேகங்கள் மீது சில்வர் அயோடைடு, சோடியம் குளோரைடு, பொட்டாசியம் அயோடைடு ஆகிய இரசாயனங்கள் தெளிக்கப்பட்டன. இதன்மூலம் மேக கூட்டங்கள் நீர்த் துளிகளாக மாறி மழை பெய்தது.

செயற்கை மழையை பெய்விக்க போதுமான மேகங்கள் தேவை. எனவே சாதகமான வானிலை நிலவும்போது டில்லியில் செயற்கை மழையை பெய்விக்க முயற்சி மேற்கொள்ளப்படும். மேக விதைப்பு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும். இதன்மூலம் டில்லி நகரின் காற்று மாசு கட்டுப்படுத்தப்படும்." என்று தெரிவித்தனர்.



# பாகிஸ்தான்-ஆப்கான் இடையே மீண்டும் போர் மூளும் அபாயம்

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையே மீண்டும் யுத்தம் நிகழும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் கடந்த சில ஆண்டுகளாக எல்லையில் அவ்வப்போது போரில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த மாதம் மீண்டும் மோதல் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து கட்டாரில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் இடையே நடைபெற்ற அமைதி பேச்சு வார்த்தையின்படி தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக துருக்கியின் இஸ்தான்புல் நகரில் கடந்த சில நாள்களாக இரு நாடுகள் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

ஆனால், இதில் இதுவரை சுமுக உடன்பாடு எட்டப்படவில்லை. பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தால் இரு நாடுகள் இடையே மீண்டும் போர் மூளும் என்று அஞ்சப்படுகிறது.

### மீண்டும் வெடித்தது காசா போர்:

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பாலஸ்தீனியர்கள் மரணம்





அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாகக் கூறி இஸ்ரேல் நடத்திய தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களில் காசாவில் குறைந்தது 33 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் நடத்தும் சிவில் பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தினரை ஹமாஸ் தாக்கியதாகவும், உயிரிழந்த பணயக்கைதிகளின் உடல்களைத் திருப்பி அளிப்பதற்கான ஒப்பந்த விதிகளை ஹமாஸ் மீறியதாகவும் இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

இதையடுத்து, இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, சக்திவாய்ந்த தாக்குதல்களை நடத்த உத்தரவிட்டதால், காசா நகரம், கான் யூனிஸ் உள்ளிட்ட பல பகுதிகளில் வீடுகள், பாடசாலைகள் மற்றும் குடியிருப்புகள் இலக்கு வைக்கப்பட்டன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல்களை ஹமாஸ் கடுமையாகக் கண்டித்துள்ளதுடன், இஸ்ரேலிய படையினர் தாக்கப்பட்டமைக்கு தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், போர் நிறுத்தத்துக்கு தாங்கள் கட்டுப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் கூற்றுப்படி, தொடர்ச்சியான குண்டு வீச்சு மற்றும் உபகரணப் பற்றாக்குறையால் மீட்புப் பணிகள் மிகவும் சிரமமாக உள்ளதாகவும், சப்ரா மற்றும் கான் யூனிஸ் போன்ற பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட பலர் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிருடன் உள்ள பணயக்கைதிகளைத் திருப்பி அளிக்கும் முதல் கட்ட ஒப்பந்தம் நிறைவடைந்த நிலையில், உயிரிழந்த பணயக்கைதிகளின் உடல்களைத் திருப்பி அளிப்பதில் ஹமாஸ் விதிமுறைகளை மீறியதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

இதனால் பணயக்கைதிகள் விவகாரத்தில் பதற்றம் நீடிக்கிறது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 29/10/2025

## சீன ஜனாதிபதியை சந்திக்கிறார் கார்னி



C2▶



# நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்க அழைப்பு; கனடாவில் 302 வெளிநாட்டவர்களுக்கு வாய்ப்பு

நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்கு மாறு கனடா அழைப்பு விடுத்துள்ளது.


கடந்த 27 ஆம் திகதி, கனடா அரசு தனது Express Entry அமைப்பின் Provincial Nominee Program (PNP) வழியாக 302 வெளிநாட்டவர்களுக்கு நிரந்தர வதிவிடத் திற்கான (PR) அழைப்புகளை அனுப்பி யுள்ளது.

இந்த அழைப்பு, draw number 374 என அழைக்கப்படுகிறது. இதில் குறைந்த பட்ச Comprehensive Ranking System (CRS) மதிப்பெண் 761 ஆக இருந்தது, இது கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதியிலிருந்து 17 புள்ளிகள் குறைந்துள்ளது.

C2▶

# இந்திய வம்சாவளி தொழிலதிபர் தர்ஷன் சிங் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சுட்டுக்கொலை





கனடாவில், இந்திய வம்சாவளி தொழிலதிபர் மர்ம நபர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பிரபல இந்திய வம்சாவளி தொழி லதிபரான தர்ஷன் சிங் (வயது68) என்பவரே, பிரிட்டிஷ் கொலம்பியாவி லுள்ள அவரது வீட்டிற்கு அருகில் மர்ம நபர் ஒருவரால் சுட்டுக் கொல லப்பட்டுள்ளார்.

அவரது வீட்டின் அருகே நிறுத் தப்பட்டிருந்த கார் ஒன்றிற்குள் மறைந்திருந்த ஒருவர், தர்ஷன் அலு வலகத்துக்கு செல்வதற்காக தனது காரில் ஏறியதும் அவரை பலமுறை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடி யுள்ளார்.

தகவலறிந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்த நிலையில், அவசர உதவிக்குழுவினர் தர்ஷனுக்கு முதலு தவி அளித்தும் அது பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.

தர்ஷனைக் கொலை செய்த நபரை பொலிஸார் தீவிரமாகத் தேடிவருகின்ற னர்.

# சீன ஜனாதிபதியை சந்திக்கிறார் கார்னி



தென் கொரியாவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கை சந்திக்க திட்டமிட்டுள்ளதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், இரு நாடுகளுக் கிடையேயான வணிக உறவுகள் மட்டுமின்றி, உலக பொருளாதார அமைப்பின் மாற்றங்களையும் விரிவாக விவாதிக்கவுள்ளதாக கார்னி தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு, கனடாவின் வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் சமீபத்தில் பீஜிங்கில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யியை சந்தித்ததைத் தொடர்ந்து நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கிடையேயான உறவை மீள அமைக்கும் புதிய கட்டத்திற்குள் நாங்கள் நுழைந்து கொண்டிருக்கிறோம் என கார்னி மலேசியாவில் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

இது, 2017ஆம் ஆண்டு அப்போதைய கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சீனாவுக்கு செய்த உத்தியோகபூர்வ விஜயத்தின் பின்னர், இரு நாடுகளின் தலைவர்கள் இடையே நடைபெறும் முதல் நேரடி சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவின் ரொரன்றோவில் சடலமாக மீட்கப்பட்ட இந்தியப் பெண்ணின் புகைப்படம் வெளியானது





கனடாவில் இந்திய வம்சாவளி பெண் ஒருவரை மற்றுமொரு இந்தியர் ஒருவர் கொலை செய்த வழக்கில் தற்போது அந்த பெண்ணின் புகைப்படம் வெளியாகியுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி, காலை 11.00 மணியளவில், கனடாவின் ரொரன்றோவிலுள்ள நோர்த் யோர்க்கில் வசித்துவந்த அமன்பிரீத் சைனி (வயது 27) என்னும் இந்திய வம்சாவளி இளம்பெண்ணின் சடலம் Charles Daley Park என்னும் பூங்காவில் கண்டெடுக்கப்பட்டது.

உடல் முழுவதும் காயங்களுடன் அந்த பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்ட நிலையில், பிராம்ப்டனைச் சேர்ந்த இந்திய இளைஞரான மன்பிரீத் சிங் (வயது 27) என்பவர்அவரை கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேற்படி இளைஞனுக்கு எதிராக கனடா முழுவதும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேற்படி இளைஞனின் புகைப்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸார், அவரைக் கண்டால், அவரது அருகில் நெருங்கவேண்டாம் என்றும் உடனடியாக அவசர உதவியை அழைக்குமாறும் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஆனால், மேற்படி சந்தேகநபர் கனடாவிலிருந்து தப்பியோடியிருக்கலாம் என தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, மேற்படி சந்தேகநபரை கைது செய்ய உதவுமாறு இந்திய பொலிஸாரை கனேடிய பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

**நிரந்திர...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


இந்த PNP திட்டம், கனடாவின் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு தேவையான திறமையான தொழிலாளர்கள், மாணவர்கள், தொழில் முனைவோர் மற்றும் அரைதிறமுடைய பணியாளர்களை தெரிவு செய்யும் வாய்ப்பை வழங்குகிறது.

PR (Permanent Residency) பெறுபவர்கள் கனடாவில் வாழ, வேலை செய்ய, மற்றும் நிரந்தரமாக குடியிருப்பதற்கான உரிமையை பெறுவர்.

CRS மதிப்பெண் விநியோக பட்டியலில், 451-500 மதிப்பெண் கொண்டவர்கள் 69,503 பேர் உள்ளனர். மொத்தமாக 248,253 பேர் Express Entry புலத்தில் உள்ளனர். இந்த விபரங்கள், புதிய விண்ணப்பங்கள் சேரும் போது மாறக்கூடும்.

இந்த அழைப்பு, கனடா அரசு வெளிநாட்டு தொழிலாளர்களை ஈர்க்கும் புதிய குடியுரிமை திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இது அமெரிக்காவின் H-1B விசா கட்டண உயர்வை எதிர்கொண்டு, கனடாவை ஒரு விருப்பமான இடமாக மாற்றும் முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.




# கனடாவில் வீடொன்றின் மீது 4ஆவது முறை துப்பாக்கிச் சூடு

கனடாவில் வீடொன்றின் மீது தொடர்ச்சியாக நான்காவது தடவையாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

யோர்க் பிராந்திய பொலிஸ், வோன் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகிறது.

பொலிஸ் தகவலின்படி, பத்தர்ஸ்ட் வீதி மற்றும் டெஸ்டன் வீதி அருகே அமைந்துள்ள ஒரு வீட்டின் முன் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் துப்பாக்கி சூட்டில் சேதமடைந்தது.

கருப்பு நிற காரில் வந்த ஒருவர் வீட்டின் முன்பாக நின்றபடி துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பியோடியுள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்தில் பல துப்பாக்கி தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

எந்த உயிரிழப்பும் அல்லது காயமும் ஏற்படவில்லை என பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இது அந்த வீட்டில் இடம்பெறும் நான்காவது துப்பாக்கிச் சூடு சம்பவம் எனவும், இதற்கு முன்பும் மூன்று முறை இதே வீட்டை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது அண்மைய மாதங்களில் வோன் நகரில் இடம்பெற்ற தொடர் வீட்டு துப்பாக்கிச் சூடு சம்பவங்களுடன் தொடர்புடையதா என்பது குறித்து இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதால், அந்தப் பகுதியில் அதிகமான பொலிஸ் புலனாய்வாளர்கள் பணியில் ஈடுபடுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

